மாவட்ட கலெக்டர் ரூபாய் கேட்டு எழுதியிருக்கிறார்கள். அவற்றை சீக்கிரத்தில் அடி ஆழப்படுத்த பணம் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திருச்செங்கோட்டில் தண்ணீர் சப்ளை செய்கிற திட்டத்தை நம் முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு ப்ளேனில் வந்து திருச்சியிலிருந்து திருச் செங்கோட்டிற்கு வந்து அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றார்கள். தேர்தல் நடக்கிற சமயமாதலால் ப்ளேனில் வருகிறார்கள், வேக மாக வருகிறார்கள், வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றிருக் கிறார்கள். அந்தத் தேர்தலில் தோற்ற பிறகு எதற்காக இந்தத் திட்டத்தை மாற்றவேண்டும்? அதற்குப் பிறகு வேறு திட்டங்களை மேற்கொள்ளப்படவில்லையா? முதல் அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டிவிட்டு, 18 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்து திட்டத்தை ஏற்ற பிறகு எதற்காக அதை ஒத்திவைக்கவேண்டு மென்பதை விளக்குவார்களா? ஒரு வேளை திருச்செங்கோடு தேர்தலில் தோற்றதுதான் காரணமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருச்செங்கோட்டில் ஏற்கனவே நான்கு கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, புதுக் கிணறு களும் வெட்டப்பட்டு தண்ணீரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

** 230 கேள்வி.*—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா புளியங்குடி முனிசிபாலிட்டிக்கு சுகாதாரமான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் சப்ளை செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் உத்தேச எஸ்டிமேட் தொகை என்ன?

(உ) எப்பொழுது, அவ்வேலை ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) to (*c*) : In March 1963 the Government have sanctioned the revised estimate amounting to Rs. 31.39 lakhs for a Composite Water Supply Scheme for Sankarankoil, Puliangudi, etc., Panchayats. The scheme is under execution.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குடிதண்ணீர் வழங்குவதற்கு எந்தயிடத்தில் இருந்து தண்ணீர் எடுப்பதாக உத்தேசம் என்ற விவரத்தை அறிவிக்க முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சங்கரன்கோவில், புளியங்குடி முனிசிபாலிட்டீஸ் தவிர முள்ளிக்குளம், தலைவன் கோட்டை, நகரம், மலயடிகுறிச்சி, வீரிருப்பு; தரிங்கபுரம் பஞ்சா யத்துக்களும் இந்த காம்போஸிட் வாட்டர் சப்ளை ஸ்கீமில் சேர்க் கப்பட்டிருக்கின்றன.